அன்பார்ந்த அங்கத்தவர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும்,

எமது பிருத்தானியா காரை நலன் புரிச்சங்கத்தின் இவ்வாண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 26/10/2014 அன்று Harrow Council மண்டபத்தில் தலைவர் ப.தவராஜா தலைமையில் கூட்டப்பட்டது. முறையே இறை வணக்கம், மௌன அஞ்சலி, மற்றும் மண்டப சுகாதார பாதுகாப்பு விதி முறைகள் ( Health & Safety instructions ), பொதுக்கூட்டத்தின் மண்டப விதிமுறைகள் என்பன பண்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டு கூட்டம் ஆரம்பமானது.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரலின்படி தலைமையுரை, காரியதரிசி அறிக்கை, தனாதிகாரி கணக்கறிக்கை என்பன எந்தவித எதிர்ப்பும் இன்றி சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அடுத்த நிகழ்வுகள் நடந்துகொண்டிருக்கையில், "காரைக் கண்ணோட்டம்" எனும் கருத்துப் பரிமாற்றம் நிகழ்வின்போது அங்கத்தவர்களுக்குள் ஏற்றபட்ட பலத்த இடையூறுகள் காரணமாக தலைவர் அக் கூட்டத்தை இடை நிறுத்தி ஒத்திவைத்தார்.

மீண்டும் இப் பொதுக்கூட்டம் அங்கத்தவர்களுக்கு தகுந்த முறையில் அறிவிக்கப்பட்டு கடந்த 07/12/2014 அன்று 17, Stonefield Close , South Ruislip எனும் இடத்தில் உள்ள மண்டபத்தில் 35 அங்கத்தவர்கள் மத்தியில் தலைவர் ப.தவராஜா தலைமையில் ஆரம்பமானது.

கடந்த பொதுக்கூட்டத்தின் தொடர்ச்சியாக இக் கூட்டம் ஆரம்பமானது. கருத்துக் கண்ணோட்டத்தில் எதுவித கருத்து பரிமாற்றமும் சபையினர் முன்வைக்காததை அடுத்து, புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்பமானது. ப.தவராஜா தலைமையிலான நிர்வாகம் உத்தியோக பூர்வமாக கலைக்கப்பட்டு மன்றத்தின் தற்காலிக நிர்வாகப் பொறுப்பை மன்றத்தின் போஷகர்களில் ஒருவரான திரு. R .சுந்தரதாசன் அவர்களிடம் கையளிக்கப்பட்டு, புதிய நிர்வாகத் தெரிவு ஆரம்பமானது.

மன்றத்தின் யாப்பின்படி நிர்வாகத்தினுள் பங்குபற்ற விரும்புவர்கள் முன்கூட்டியே தங்கள் தங்களுக்கு விருப்பமான தகுதியான பதவிகளுக்கு விண்ணப்பித்திருக்க வேண்டும் என்பது விதிமுறை (Agreed Proposed changes in KWS- UK constitution Auguest 2013 AGM, clause 16-officers and trustees- sub clause 6&7).

தலைவர் பதவிக்கு தொடர்ந்தும் திரு ப. தவராஜாவும், செயலாளர் பதவிக்கு திரு S .சிவபாதசுந்தரம், உப செயலாளர் பதவிக்கு திரு. S .மனோகரன், உப பொருளாளர் பதவிக்கு திரு. பொ. ஞானனந்தன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் பதவிக்கு 6 பேரும் விண்ணப்பித்திருந்தனர். பொருளாளர், உப தலைவர் பதவிகளுக்கு எவரும் விண்ணப்பித்திருக்கவில்லை.

போஷகர் புதிய நிர்வாக தெரிவின் போது அந்தந்த பதவிகளுக்கு விண்ணப்பித்திருந்தோர் விண்ணப்பங்களை விபரித்தார். சபையில் இருந்த திரு.இராமநாதன் சிவசுப்ரமணியம் (Banker) அவர்கள் தலைவர் பதவிக்கு திரு.S .கோணேசலிங்கத்தை தான் தலைவராக தெரிவு செய்வதாக முன்மொழிந்தார், இதனை திரு முருகேசு யோகராஜா வழிமொழிந்தார். இருந்தும் திரு .S கோணேசலிங்கம் அவர்கள் இந்தனை ஏற்க மறுத்தார். எனவே தலைவராக திரு ப.தவராஜா மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

போஷகர் உப தலைவர் பதவிக்கு ஒருவரை தெரிவு செய்யும்படி சபையினரிடம் வேண்டுகோழ் விடுக்கையில் திரு .ப . தவராஜா எழுந்து,தான் மன்றத்தின் ஒற்றுமை, மற்றும் எதிர்கால நலன் கருதி தலைவர் பதவியை ராஜீனாமா செய்து திரு.S .கோணேஷாலிங்கத்தை தெரிவு செய்வதாக கூறி அமர்ந்தார். திரு. கோணேசலிங்கமும் இக்கருத்தினையே தானும் மனதில் கொண்டு இப்பதவியை

ஒருமனதோடு ஏற்பதாக ஏற்றுக்கொண்டார். அதன் பின்னர் மேற்படி கூட்டம் எதுவித சலசலப்பும் இன்றி ஏனைய பதவிகள் தெரிவு செய்யப்பட்டன. பதவி ஏற்றோர் விபரம் பின்வருமாறு :-

தலைவர் :- திரு .சுப்பிரமணியம் கோணேசலிங்கம்

உப தலைவர் :- திரு குமாரசாமி விக்னேஸ்வரன்

செயலாளர் :- திரு .சோமசுந்தரம் சிவபாதசுந்தரம்

உப செயலாளர் :- திரு செல்வநாயகம்பிள்ளை மனோகரன்

பொருளாளர் :- திரு .பாலசுப்ரமணியம் கஜேந்திரன்

உப பொருளாளர் :- திரு .பொன்னையா ஞானனந்தன்

நிர்வாகசபை உறுப்பினர்கள் ;-

1. Dr. A . நல்லைநாதன்
2. திரு.M .மகேந்திரம்
3. திரு.K .ராஜரட்ணம்
4. திரு. N . ரவீந்திரன்
5. திரு. S .கிருபாகரன்
6. திரு. S . சிவராஜா
7. திரு. K . சேந்தன்
8. திரு. T . தனபாலன்
9. திரு.M . யோகராஜா
10. திருமதி. S .சர்வானந்தன்

போஷகர் சபை:-

1. திரு ப. தவராஜா
2. திரு.வி.நாகேந்திரன்
3. திரு.இ. சுந்தரதாசன்

இப் பதவிகள் தெரிவினை தொடர்ந்து, புதிய தலைவர் திரு S .கோணேசலிங்கம் அவர்கள் தனது கன்னி உரையில், பதவி விலகிச் செல்லும் தலைவர் திரு ப. தவராஜா அவர்கள் தமது தலைமைக் காலத்தில் ஆற்றிய சேவைகள் பற்றியும், அவரது நிர்வாக ஆழுமை, பெருந்தன்மை, சொந்த அர்ப்பணங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

மேலும் அவர் தனது உரையில் காரை மாணவர் நூலகம், மற்றும் மன்றத்தின் 25வது ஆண்டு நிறைவு விழா(2015) பற்றியும் சபையினருடன் ஆராய்ந்தார். மேலும் புதிய நிர்வாகத்தினர் சபைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, இப் பொதுக்கூட்டம் நிறைவுற்றது .

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்
குறள் 662
நன்றி வணக்கம்
நிர்வாகம் - பிருத்தானியா காரை நலன்புரிச் சங்கம்.